[21st October 1971

திரு. வி. வெங்கா: வட்ட, மாவட்ட அளவில் அமைய இருக்கிற இந்த அரிஜன நல வாரியங்களில் அந்தந்தப் பகுதிகளைச் சேர்ந்த சட்டமன்ற, மேலவை உறுப்பினர்களை அங்கத்தினர்களாகச் சேர்த்துக்கொள்ளும் எண்ணம் அரசிற்கு இருக்கிறதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: மாவட்ட மாநில ஆலோசனைக் குழுக்களில் பெரும்பாலான சட்டமன்ற பாராளுமன்ற மேலவை உறுப்பினர்கள் அங்கம் வகிக்கிறார்கள். தாலுகா வாரியாக, பிர்கா வாரியாக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படும்போது, சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் அதற்கு வாய்ப்பாக இருக்க முடியாது. மாநில அளவில் பங்குபெறும்போது, சட்ட மன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டால் அதுபற்றி யோசிக்கப் படும்.

Harijan Colonies

*8. *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) the number of Harijan Colonies built and promoted by the Government in the State during the years 1968-69, 1969-70 and 1970-71; and

(*b*) the expenditure incurred thereon?

அரிசன குடியிருப்புகள்.

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) இம்மாநிலத்தில் 1968-69, 1969-70, 1970-71-ஆம் ஆண்டுகளில் அரசினால் கட்டப்பட்ட, தொடங்கி வைக்கப்பட்ட அரிசனக் குடியிருப்புக்களின் எண்ணிக்கை என்ன?

(இ) இது குறித்து அரசு செலவழித்த தொகை எவ்வளவு?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) அரிசனங்களுக்காக கட்டப் பட்ட வீடுகளின் விவரம் வருமாறு:—

1968-69—151.

1969-70—137.

1970-71—600

(இ) செலவு விவரம் வருமாறு:—

1968-69—ரூ. 39,720

* 1969-70—ரூ. 68,770

1970-71—ரூ. 4,63,307

* முந்திய ஆண்டுகளின் வேலைகளுக்கான செலவும் இதில் அடங்கியுள்ளது.